பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

28 09 2025 SUNDAY 6.30 PM

## <u>மாநிலச் செய்திகள்</u>

## <u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் காதிப்பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. கரூர் த வெ க நிகழ்ச்சிக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

3. கரூர் உயிரிழப்பு சம்பவத்திற்கு பாதுகாப்பு குறைபாடுகளே காரணம் என்று அஇஅதிமுக, பிஜேபி மற்றும் த மா க குற்றம் சாட்டியுள்ளன.

4. நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<<<<>>>>>>>

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் காதிப்பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

*<u>(Sound Byte – மோடி (1) காதி - 48 Sec.)</u>*

காதியை போலவே கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் துறையிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தை சேர்ந்த இருவர் புல் மற்றும் வாழை நார்களால் யோகா பாயை தயாரித்து வருவதை பற்றி குறிப்பிட்டும் திரு மோடி பேசினார்.

*(Sound Byte – மோடி (2) கைத்தறி– 44 Sec.)*

இதற்கிடையே, குமாரப்பாளையத்தை சேர்ந்த இந்த நிறுவனம் குறித்து பிரதமர் பேசியது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அதன் ஊழியர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(Voice Byte – ஊழியர்கள் – 51 Sec.)*

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

<<<<<<<<>>>>>>>>

கரூர் த வெ க நிகழ்ச்சிக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டதாக சட்டம் - ஒழுங்கு ஏ டி ஜி பி திரு டேவிட்சன் தேவாசிர்வாதம் தெரிவித்துள்ளார்.

இன்று கரூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte - டேவிட்சன் தேவாசிர்வாதம் – 40 Sec.)*

<<<<<<<<>>>>>>>>

கரூர் உயிரிழப்பு சம்பவத்திற்கு பாதுகாப்பு குறைபாடுகளே காரணம் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கரூரில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

அரசியல் கட்சி நிகழ்ச்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதில் காவல்துறையினர் பாரபட்சமாக செயல்படுவதாகவும் அவர் குறை கூறினார்.

முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் பங்கேற்கும் கூட்டங்களுக்கு கூடுதல் காவலர்கள் பணியமர்த்தப்படுவதாகவும், எதிர்க்கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இதற்கிடையே, கரூர் சம்பவம் தொடர்பாக தமிழகமே துயரத்தில் இருக்க, எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி அதிலும்

அரசியல் செய்வதாக மாநில அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பேரிடரிலும் திரு எடப்பாடி பழனிசாமி அரசியல் செய்வதாக குறை கூறியுள்ளார்.

த வெ க கூட்டத்திற்கு முழுமையான பாதுகாப்பு காவல்துறையால் வழங்கப்பட்டதாகவும் திரு மா. சுப்பிரமணியன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>>

கரூர் த வெ க நிகழ்ச்சியில் 40 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இன்று கரூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவல்துறையினர் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய தவறிவிட்டதாக குறை கூறினார்.

சம்பவ இடத்தில் மூன்று முறை மின்வெட்டு ஏற்பட்டதாக தெரிவித்த அவர், அப்பகுதியில் ஆம்புலன்ஸ் எதற்காக வந்தது என்பதற்கான காரணம் தெரியவில்லை என்றும் கூறினார்.

ஆளுங்கட்சியை சேர்ந்த முன்னாள் அமைச்சர் திட்டமிட்டு ஏற்பாடு செய்தாரா என்றும் அவர் வினவினார்.

இந்த சம்பவம் குறித்து உச்சநீதிமன்ற நீதிபதிகளை கொண்ட அமர்வு விசாரிக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<<>>>>>>>>

கரூர் உயிரிழப்பு சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று த மா க தலைவர் திரு ஜி கே வாசன் வலியுறுத்தியுள்ளார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சம்பவம் தொடர்பாக நேர்மையான, நடுநிலையான விசாரணைக்கு இது அவசியமாகிறது என்று தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்கு தமிழக அரசு போதிய பாதுகாப்பு வழங்குவதில்லை என்றும் திரு ஜி கே வாசன் குற்றம் சாட்டினார்.

<<<<<<<<>>>>>>>>

நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் – 48 Sec. )*

<<<<<<<<>>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சேலம் ரயில் நிலையத்தில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுசெல்லப்பட்ட ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான வெள்ளி நகைகளை ரயில்வே பாதுகாப்புப்படையினர் பறிமுதல் செய்தனர்.

------------------

காஞ்சிபுரம் அரசு இசைப்பள்ளியில் விஜயதசமியை முன்னிட்டு மாணவர் சேர்க்கை நடைபெறுவதாக ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 50 மீட்டர் பிரிவில் Anushka Thokur தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 50 மீட்டர் பிரிவில் Adriyan Karmakar வெள்ளிப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில், இந்தியா இதுவரை 4 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.

------------------

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

<<<<<<<>>>>>>>